**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் -திரு.சந்திரசேகர் **PW-1**

**(எதிரி ஆஜர் )**

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் விபத்தை பார்த்ததாக சொல்லும் இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் சுமார் 18 கிலோமீட்டர் தூரம் உள்ளது என்றால் சரி. அன்றைய தினம் அந்த இடத்தில் சென்று நான் என் நண்பரை பார்ப்பதற்காக காத்திருந்ததாக சொல்லியுள்ளேன் ஆனால் அந்த நண்பரின் பெயர் விவரம் போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரி. எனது அண்ணி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் பேருந்து மோதியதால் இருசக்கர வாகனத்தில் பின்பகுதியில் சேதம் ஏற்பட்டதா என்றால் அந்த நேரம் வாகனத்தில் சேதம் ஏற்பட்டதா என்பதை நான் பார்க்கவில்லை. காயம் பட்டவரை நான் ஏற்றிவிட்ட வாகனம் மாருதி ஆம்னி வேனா என்றால் இல்லை, 108 ஆம்புலன்ஸ் ஆகும். காயம்பட்ட நபர் என் அண்ணனின் பெண் என்பதனால் ஆம்புலன்ஸ் உடன் சென்று சிகிச்சைக்கு சேர்க்க வேண்டும் என்று எனக்கு தோன்றியது என்றால் ஆமாம். நான் ஆம்புலன்ஸ் உடன் சென்றேனா என்றால் இல்லை. காயம் பட்டவரை ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பிவிட்டு உடனடியாக நான் சித்தோடு காவல் நிலையம் சென்று விட்டேனா என்றால் ஆமாம். நான் விபத்தை எவ்வளவு தூரத்திலிருந்து பார்த்தேன் என்றால் சரியாக சொல்ல தெரியவில்லை, 200 அடி இருக்குமா என்றால் இல்லை, அதற்கும் குறைவாக தான் இருக்கும். என் அண்ணி தலைக்கவசம் அணிந்து சென்றாரா என்ற விவரத்தை நான் புகாரில் சொல்லவில்லை என்றால்

ஆமாம். விபத்தில் இறந்து போன குழந்தை தலைக்கவசம் அணிந்து இருந்தாரா என்ற விவரத்தையும் புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரி.

நான் சித்தோடு காவல் நிலையம் சென்ற பின்பு எவ்வளவு நேரம் கழித்து என் அண்ணனின் குழந்தை இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் காவல் நிலையம் சென்று நான் காத்திருந்த சமயம் குழந்தை இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். அதன் பின்னர் தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். புகாரில் குழந்தை இறந்து போன விவரம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. முதலில் புகார் கொடுத்துவிட்டு பின்னர் நான் ஜிஹெச் சென்ற பின்பு தான் குழந்தை இறந்த விபரம் உறுதியாக தெரிந்து கொண்டேன். புகார் கொடுத்த பின்பு காவல்துறையினர் என்னை வேறு எங்காவது வைத்து விசாரித்தார்களா என்றால் இல்லை.

நான் ஜி ஹெச் சென்ற பின்பு சித்தோடு காவல்துறையினர் ஜிஹெச்க்கு வந்தார்களா என்றால் ஆமாம். அப்போது அவர்கள் என் அண்ணியை விசாரித்தார்களா என்றால் அது எனக்கு தெரியவில்லை, வேறு யாரையாவது போலீஸ் விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. நான் சொன்ன விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றும், என் அண்ணியின் அஜாக்கிரதையின் காரணமாக தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போனவர் என் அண்ணனின் குழந்தை என்பதனால் நான் பார்க்காத விபத்தை பார்த்ததாக காவல் நிலையத்திற்கு சென்று அ.சா.ஆ.1 புகாரை பின்னிட்டு கொடுத்துவிட்டு நஷ்ட ஈடு அதிகம் பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Digitally signed by K KRISHNA PRIYA